# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 60 /பேரூ/2026**
**நாள் : 22.09.2026**

M. அருள்நிதி, – முறையீட்டு மனுதாரர்
சேத்தியாத்தோப்பு,
கடலூர் மாவட்டம்.

செயல் அலுவலர்,
சேத்தியாத்தோப்பு பேரூராட்சி,
கடலூர் மாவட்டம். - எதிர் மனுதாரர்

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், சேத்தியாத்தோப்பு அஞ்சல், அள்ளூர், கும்பகோணம் மெயின் ரோடு என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. அருள்நிதி என்பவரின் **04.03.2026** நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் **06.03.2026** அன்று பெறப்பட்டு, **60/பேரூ/2026** என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், சேத்தியாத்தோப்பு அஞ்சல், அள்ளூர், கும்பகோணம் மெயின் ரோடு என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு. M. அருள்நிதி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த **04.03.2026** நாளிட்ட முறையீட்டு மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

“கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு பேரூராட்சிக்கு சொந்தமான புல எண். **204/33, 204/34, 204/35** வருவாய் துறை"யினர் ஆவணம் அறிக்கைப்படி, அந்த இடம் பேரூராட்சிக்கு சொந்தமானது என்றும், அந்த இடங்களில் தற்போதைய பேரூராட்சி மன்ற தலைவர் திரு. தங்க குலோத்துங்கன்” அவர்களின் சிறிய தந்தையும், 1வது வார்டு உறுப்பினர் திரு. G. கார்த்திகேயன் அவர்களின் தந்தையும், முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர் திரு. பட்டு கணேசன் என்பவர் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் அதில் அவர் கடைகட்டி வாடகை விடுகின்றார். அதன்மூலம் பல இலட்சம் அட்வான்ஸ், வாடகை பெற்று வருகின்றார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த இடத்தில் முற்காலத்தில் பேரூராட்சி அலுவலகம் , கால்நடை மருத்துவமனை, நூலகம், மனமகிழ்மன்றம் இருந்தது நாடே அறியும்.

இது சம்பந்தமாக நான் கடந்த 1 ½ வருடங்களுக்கு முன்பு 16.06.2024 தேதியில் செயல் அலுவலர் திரு. தி. சீனுவாசன் மற்றும் தலைவர், துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தீர்மானம் போட்டு காலி செய்ய வலியுறுத்தி ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சலில் கூட்ட அழைப்பு ஒன்றை அனுப்பி வைத்தேன். (நகல் இணைக்கப்பட்டுள்ளது). அதில் ஒருவர் 1வது வார்டு உறுப்பினர் திரு. G. கார்த்திகேயன் என்பவர் மட்டும் வாங்க மறுத்து திருப்பி அனுப்பி விட்டார். இந்த கூட்ட அழைப்பு சம்பந்தமாக இன்றைய தேதி வரையில் மக்கள் மன்றத்தினரோ, அரசு அதிகாரிகளோ எந்தவித நடவடிக்கையோ, தீர்மானம் போட்டு ஆக்கிரமிப்பு அகற்றி பொது பயன்பாட்டிற்கோ விடப்படவில்லை.

அதன்பிறகு கடந்த 1 மாதத்திற்கு முன்பு 24.01.2026 தேதியில் இரண்டு பக்க விளக்கத்துடன் 18 பக்க அரசு ஆவண நகல்களுடன் 30 நாள் அறிவிப்பு ஒன்றை ஒப்புகையுடன் கூடிய விரைவு அஞ்சலில் அனுப்பிய வகையில் அரசாங்க சகாக்கள் 1. திருமதி. M. உமா மகேஸ்வரி, 2. திருமதி. S. வைஷ்ணவி, 3. திருமதி சௌந்தர்யா மக்கள் மன்ற சகாக்கள், 4. திரு. தங்க குலோத்துங்கன், 5. திரு. G. கார்த்திகேயன், 6. திரு. பட்டுகணேசன் ஆகியோர் வாங்க மறுத்து திருப்பி அனுப்பி விட்டார்கள். மற்ற அரசு அதிகாரிகள் வட்டாட்சியர், வட்ட வருவாய், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சியர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநர், மாவட்ட கண்காணிப்பாளர். காவல்துறை ஆகியோர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் பெற்றுக் கொண்டனர் (நகல் இணைக்கப்பட்டுள்ளது).

மேற்கண்ட அனைத்து மன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் அனைவரும் அழுத்தம் கொடுத்த நிலையிலும் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தலைவர் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பொழுது பதவி பிரமாணம் எடுத்து கொண்டதற்கு எதிராக தனது உறவினருக்கு பண பலம் பெறும் வகையில் நடந்துகொண்டு நடவடிக்கை ஏதும் எடுக்காமல் தீர்மானம் ஏதும் போடாமல் தனது பதவிக்கு களங்கம் ஏற்படுத்திவிட்டார். மேலும் பொதுமக்களால் கொடுக்கப்படும் கடிதங்களை கூட வாங்க மறுக்கின்றார். அவரின் தூண்டுதலின் பெயரில் செயல் அலுவலரும் அவருடைய சகாக்களும் செயல்படுகின்றார்கள். அரசு பணியை முழுமையாக புறக்கணிக்கின்றார்கள். இது தண்டனைக்குரிய குற்றமாகும்.

எனவே, மேலே குறிப்பிட்டுள்ள அனைவருக்கும் அழைப்பாணை அனுப்பி, விசாரணை அடிப்படையில் அவர்களிடம் இருந்து அறிக்கை பெற்று, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது பொதுநலம் சார்ந்த கிரிமினல் வழக்கு பதிய பரிந்துரை செய்ய வேண்டுமாய் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

M. அருள்நிதி என்ற பெயருடைய நான் மேலே கண்ட மற்றும் அளிக்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை மற்றும் சரியானது என உறுதி அளிக்கின்றேன்"என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 25.03.2026 நாளிட்ட அறிவிப்பின் மூலம் சேத்தியாத்தோப்பு பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

3. எனினும் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான சேத்தியாத்தோப்பு பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 13.08.2026 அன்று நடைபெறவிருக்கும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் மற்றும் விரிவான அறிக்கையுடன் ஆஜராகுமாறு 29.07.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இதற்கிடையில் எதிர்மனுதாரரான சேத்தியாத்தோப்பு பேரூராட்சி செயல் அலுவலர் தனது 28.07.2026 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 93/2026ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார். அதில் –

"கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், சேத்தியாத்தோப்பு பேரூராட்சி எல்லைக்குட்பட்ட புல எண். 204/33, 204/34, 204/35 ஆகியவைகள் அரசுக்கு சொந்தமான நீர்வழி புறம்போக்கு மற்றும் பேரூராட்சிக்கு சொந்தமான இடங்கள் என்றும் முறையீட்டு மனுவில் தெரிவித்த வகையில் அந்த இடங்களில் ஆக்கிரமிப்புகளை அகற்றி பொது பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் புகார் மனு வரப்பெற்றதை தொடர்ந்து புவனகிரி வட்டாட்சியருக்கு பேரூராட்சி அலுவலக கடித ந.க.எண். 93/2026, நாள் 02.04.2026, 19.05.2026, 30.06.2026 மற்றும் 15.07.2026 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக ஆக்கிரமிப்பு அகற்ற மேற்படி இடத்தினை அளந்து தரவும் ஆக்கிரமிப்புகள் அளவினை குறியீடு செய்து தர கோரப்பட்டது.

புவனகிரி வட்டாட்சியரின் அழைப்பாணை ந.க.எண். அ4/234/2026 நாள் 19.06.2026ன்படி சேத்தியாத்தோப்பு பேரூராட்சி வருவாய் கிராமம் புல எண். 204/33, 204/34, 204/35–னை 24.06.2026 அன்று அளவீடு பணி மற்றும் விசாரணை மேற்கொள்ள வட்டாட்சியரால் தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து 24.06.2026 அன்று நில அளவையர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சேத்தியாத்தோப்பு பேரூராட்சி பணி மேற்பார்வையாளர், தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் சேத்தியாத்தோப்பு காவலர்கள், பொதுமக்கள் முன்னிலையில் நில அளவீடு பணி மேற்கொள்ளப்பட்டது. (புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளது). எனினும் அன்று அளவீடு செய்யும் பணி முழுமை பெறவில்லை. பொதுமக்கள் தலையீட்டால் மேற்காணும் பணி முழுமையாக நடைபெறவில்லை.

புவனகிரி வட்டாட்சியருக்கு இப்பேரூராட்சி அலுவலக 30.06.2026 தேதிய கடிதத்திலும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விபரம் சமர்ப்பிக்கப்பட வேண்டி உள்ள விபரம் நேரடியாக செயல் அலுவலர், சேத்தியாத்தோப்பு பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது. எனினும் நாளது வரை வட்டாட்சியர் அவர்களிடமிருந்து 24.06.2026 அன்று நடைபெற்ற நில அளவை குறித்த விபரங்கள் ஏதும் பெறப்படவில்லை மற்றும் இப்பேரூராட்சியால் 15.07.2026 தேதிய கடிதத்தில் மீள அளவீடு செய்யும் பணி மேற்கொள்ள கோரப்பட்டுள்ளது.

புவனகிரி வட்டாட்சியர் அவர்களால் சேத்தியாத்தோப்பு வருவாய் கிராம புல எண்கள். 204/33, 204/34, 204/35 அளந்து அரசுக்கு சொந்தமான இடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு அளவினை குறியீடு செய்து தந்தவுடன் பேரூராட்சி மூலம் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஆக்கிரமிப்புகள் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்கிற விவரம் பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. மனுதாரர் திரு. M. அருள்நிதி என்பவர் 13.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு பேரூராட்சிக்கு சொந்தமான புல எண். 204/35ல் உள்ள 2 ½ சென்ட் இடம் இன்றைய தேதிவரை கம்பியூட்டர் சிட்டாவில் பேரூராட்சிக்கு சொந்தமானது என்று உள்ளது. மேலும் 204/35 இடம் பதிவு செய்யப்பட்ட ஆவணப்படி தானசெட்டில்மென்டில் பேரூராட்சிக்கு கனகரத்தினம் என்பவரால் தானம்

கொடுக்கப்பட்டது. இவை இரண்டிற்கும் ஆவணம் தங்களிடம் சமர்ப்பித்துள்ளேன்.

- மேலும் 204/33, 204/34, 204/35 புல எண்கள் கொண்ட இடத்தில் முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர் பட்டு கணேசன் த/பெ. பட்டுசாமி என்பவர் ஆக்கிரமித்து கடை கட்டியுள்ளார் என்று வருவாய் ஆய்வாளர் திரு. ஜான்பிரிட்டே தனது அறிக்கையில் தெளிவாக கூறியுள்ளார். மேலும் வட்டாட்சியர் திரு. அன்பழகன் என்பவர் அந்த இடம் முன்னாள் தலைவர் இளஞ்செழியன் த/பெ. தெய்வசாமி ஆக்கிரமித்துள்ளதாக தெரிவித்து உள்ளார். அந்த இடத்தில் கடைகள் கட்டி முறைகேடாக வாடகை பெற்று வருகிறார்கள்.

- மேற்காணும் வகையில் பேரூராட்சிக்கு இழப்பு ஏற்படும் வகையில் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள கடைகளை அகற்றிட கோரி பேரூராட்சி மன்றத் தலைவர், உறுப்பினர்கள், செயல் அலுவலர்களுக்கு பல வகையில் கடந்த 4 வருடங்களாக மனு போட்டும் பலன் இல்லை. எனது புகாரில் தெரிவித்துள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நில அளவீடு பணிகளை மேற்கொள்ள வட்டாட்சியர் உத்திரவு இட்டும் கடந்த 1 வருடம் 2 மாதங்களாக அளவீடு பணி ஏதும் இன்றுவரை நடைபெறவில்லை.

- எனவே மேற்காணும் முறைகேடுகளுக்கு காரணமான சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் அனைவர் மீதும் நடவடிக்கை மேற்கொண்டு, மேற்படி நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி பேரூராட்சி வசம் ஒப்படைத்து அந்த இடத்தில் பொது நலத் திட்டங்களுக்கு உபயோகப்படுத்த உத்திரவு இடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான சேத்தியாத்தோப்பு பேரூராட்சி செயல் அலுவலர் 13.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு பேரூராட்சியில் புல எண். 204/33, 204/34 மற்றும் 204/35ல் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என மனுதாரர் புகார் தெரிவித்துள்ளார். ஆனால் புல எண். 204/33, 204/34ல் அமைந்துள்ள இடமானது பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளுக்கு சொந்தமானதாகும். புல எண். 204/35 சேத்தியாத்தோப்பு பேரூராட்சிக்கு சொந்தமானதாகும்.

- மனுதாரர் புகாராக தெரிவிக்கும் மேற்காணும் இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட ஏதுவாக நில அளவீடு செய்து ஆக்கிரமிப்புகளின் அளவினை குறியீடு செய்து தருமாறு 02.04.2026 நாளிட்ட கடிதத்தின் மூலம் புவனகிரி வட்டாட்சியரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

- அதன்படி புல எண். 204/33, 204/34, 204/35ல் 24.06.2026 அன்று நில அளவையர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சேத்தியாத்தோப்பு பேரூராட்சி பணி மேற்பார்வையாளர், தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் நில அளவீடு மேற்கொள்ளப்பட்டது.

- ஆனால் பொதுமக்களின் தலையீட்டால் மேற்காணும் நில அளவீடு செய்யும் பணி முழுமையாக நடைபெறவில்லை. 24.06.2026 அன்று நடைபெற்ற நில அளவீடு தொடர்பான எவ்வித இடைநிலை அறிக்கையும் வட்டாட்சியரிடமிருந்து பெறப்படவில்லை.

- இருப்பினும் மேற்காணும் புல எண். 204/33, 204/34 மற்றும் 204/35 இடங்களில் மீண்டும் மறு அளவீடு செய்து ஆக்கிரமிப்பு அளவினை குறியீடு செய்து தருமாறு வலியுறுத்தி 15.07.2026 நாளிட்ட கடிதத்தின் மூலம் புவனகிரி வட்டாட்சியரை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் எவ்வித அறிக்கையும் வட்டாட்சியரிடமிருந்து இந்நாள்வரை பெறப்படவில்லை.

- மேற்காணும் எண்கள் 204/33, 204/34 மற்றும் 204/35 ல் அமைந்துள்ள இடத்தினை வருவாய்த் துறை மூலம் அளவீடு செய்த பின்னரே பேரூராட்சி மூலம் ஆக்கிரமிப்பு இருப்பின் அதனை அகற்றிட முடியும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

- இருப்பினும் மேற்காணும் நில அளவீடு செய்வதற்கு ஒரு வார காலத்திற்குள் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் கவனத்திற்கு கொண்டு சென்று நிலஅளவீடு செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் ஆக்கிரமிப்பு இருப்பின் எவ்வித காலதாமதமின்றி அதனை அகற்றுவதற்கான உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென இம்முறைமன்ற நடுவத்தில் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. இதற்கிடையில் சேத்தியாத்தோப்பு பேரூராட்சி செயல் அலுவலர் தனது 17.08.2026 நாளிட்ட கடித ந.க. எண். 93/2026ல், மனுதாரர் புகாராக தெரிவிக்கும் அரசுக்கு சொந்தமான சேத்தியாத்தோப்பு பேரூராட்சிக்குட்பட்ட புல எண்கள் 204/33 204/34 மற்றும் 204/35 இடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு அளவினை குறியீடு செய்து தரவேண்டி கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான சேத்தியாத்தோப்பு பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு இடத்தை சார்ந்த மனுதாரர் திரு. M. அருள்நிதி என்பவர் தனது புகார் மனு மற்றும் வாக்குமூலத்தில் சேத்தியாத்தோப்பு பேரூராட்சிக்கு சொந்தமான புல எண்கள் 204/33, 204/34 மற்றும் 204/35 கொண்ட இடத்தில் முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் திரு. பட்டு கணேசன் என்பவரால் ஆக்கிரமிப்பு செய்து, கடைகளை கட்டி வாடகை பெற்று வருவதாகவும், இவ்விடத்தில் ஆக்கிரமிப்பு நடைபெற்று உள்ளதை முன்னாள் வருவாய் ஆய்வாளர் உறுதி செய்துள்ளார் எனவும், இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றிட கடந்த 4 வருடங்களாக வலியுறுத்தியும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், ஆக்கிரமித்த இடத்தில் தனி நபரால் கடைகளை கட்டி வாடகைக்கு விடுவதால், பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுவதாகவும் புகாராக தெரிவித்திருப்பதை மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரரின் புகார் மனு வரப்பெற்றதும், மனுதாரர் புகாராக தெரிவிக்கும் புல எண்கள் 204/33, 204/34 மற்றும் 204/35ல் அமைந்துள்ள ஆக்கிரமிப்புகளின் அளவினை குறியீடு செய்து தரக் கோரி புவனகிரி வட்டாட்சியருக்கு 02.04.2026, 15.05.2026 நாளிட்ட கடிதங்கள் மூலம் கோரப்பட்டதில், 24.06.2026 அன்று நில அளவையர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் பொதுமக்களின் முன்னிலையில் நில அளவீடு மேற்கொண்டிருக்கும் சமயத்தில் பொதுமக்களின் தலையீடு காரணமாக 24.06.2026 அன்று நில அளவீடு பணி முழுமையாக நடைபெறவில்லை எனவும், இருப்பினும் 15.07.2026 நாளிட்ட கடிதத்தின் மூலம் மீள நில அளவீடு செய்து தர புவனகிரி வட்டாட்சியருக்கு கோரப்பட்டது எனவும் இந்நாள்வரை அளவீடு பணி மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவித்திருப்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

மேலும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி, மேற்காணும் இடத்தில் ஆக்கிரமிப்பு அளவீடு பணியினை வருவாய்த் துறையால் விரைந்து மேற்கொள்ளும் பொருட்டு, கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் தனி கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளதை பேரூராட்சி செயல் அலுவலரால் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ள 17.08.2026 நாளிட்ட கடிதம் மூலம் தெரிய வருகிறது.

இந்நிலையில், பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் வருவாய்த் துறை மூலம் அளவீடு செய்த பின்னரே பேரூராட்சி மூலம் ஆக்கிரமிப்பு இருப்பின் அதனை அகற்றிட முடியும் என தெரிவித்துள்ள நிலையில், எதிர்மனுதாரர் இதில் தனிக்கவனம் செலுத்தி, வருவாய்த்துறை மூலம் விரைவாக அளவீடு செய்வதற்கான உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதன் அறிக்கையை பேரூராட்சிகளின் இயக்குநருக்கு 3 மாத காலத்திற்குள் அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. M. அருள்நிதி ,
   கும்பகோணம் மெயின் ரோடு,
   அள்ளூர், சேத்தியாத்தோப்பு அஞ்சல்,
   சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம்,
2. செயல் அலுவலர்,
   சேத்தியாத்தோப்பு பேரூராட்சி, கடலூர் மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).(பெயரிட்ட உறையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை–28.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24/9/26

செயலாளர்.

24/9/26.